போடுகின்ற சூழ்நிலையில் போடுவோம் என்றாலும் பகுதி நேர ஆசிரியர்கள் கண்டிப்பாகத் தேவைப்படுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், பாங்கிங் பாடப் பிரிவைப் பொறுத்தவரையில் ஒரு முழு நேர ஆசிரியரை நியமிப்பதை விட அந்தப் பகுதியிலே இருக்கிற பாங்கிலே உத்தியோகம் பார்க்கின்ற அதிகாரி ஒருவர் வந்து சொல்லித் தருகின்ற நிலை இருந்தால் அந்தப் படிப்பு தரமானதாக இருக்கும்; காலத்திற்கு ஏற்றதாக இருக்கும். ஆகவே, அந்தமாதிரி பாடத்திற்கு பகுதி நேர ஆசிரியர் தேவை என்று வைத்திருக்கிறோம்.

திரு .தி. க. நல்லப்பன்: தலைவரவர்களே, இந்தப் பகுதி நேர ஆசிரியர்கள் எந்தெந்த தொழில் படிப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழில் கல்வியைப் பொருத்த மட்டில் இந்தப் பகுதி நேர ஆசிரியர்கள் என்ற ஒரு பிரிவை வைத்து நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். பல இடங்களிலே இது நல்ல பலனைத் தந்துகொண்டிருக்கிறது. ஆகவேதான் அந்தத் தொழில் பாடங்களை நாம் அந்த அடிப்படையில் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற அளவிலே விவரத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

போளூர் பகுதியில் பொறியியல் தொழிற்கல்விப் பள்ளி.

*வினா எண். 144 திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போளூர் பகுதியில் பொறியியல் தொழிற்கல்வி பள்ளி (பாலிடெக்னிக்) ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்காக, எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு செ. அரங்கநாயகம்.— (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, போளூர், ஆரணி, கலசப்பாக்கம் போன்ற ஊர்களிலிருந்து ஏறக்குறைய 35 மைல்களுக்கு எந்தவிதமான கல்லூரிகளோ தொழில் பயிற்சி நிலையங்களோ இல்லை. ஆகவே அது குறித்து இந்த அரசு பரிசீலிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவரவர்களே, இப்போது புதுக்கோட்டை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பாலிடெக்னிக் இல்லை என்ற காரணத்தால் அங்கே பாலிடெக்னிக்கை ஏற்படுத்த வேண்டும் என்று அரசு முடிவு எடுத்திருக்கின்றது. ஆகவே அந்த இரண்டு மாவட்டங்களிலும் பாலிடெக்னிக் ஆரபிக்கப்பட்ட பிறகு மற்ற இடங்களிலே யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, முந்தைய சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் விளாத்திகுளம் பகுதியில் பாலிடெக்னிக் ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அமைச்சரவர்களும் அதனைப் பரிசீலனை செய்வதாகப் பதில் அளித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போரூரில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்படுமா என்பது பற்றிய கேள்வி இது, ஆகவே ஒவ்வொரு இடமாகக் கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது.

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, அடுத்த ஆண்டாவது தமிழ்நாட்டிலே எங்கெங்கு பாலிடெக்னிக் தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, முந்திய கேள்விக்குச் சொன்ன பதிலைத்தான் நான் இதற்கும் சொல்ல விரும்புகிறேன். புதுகோட்டை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்பட்ட பிறகுதான் மற்றவை பற்றி பரிசீலிக்கப்படும்.

மதுரை சட்டக்கல்லூரியில் சட்டமேற்படிப்பு.

*வினா எண் 145: திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை சட்டக்கல்லூரியில் சட்ட மேற்படிப்பு(எம்.எல்) ஆரம்பிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:— (அ) ஆம். மதுரை சட்ட கல்லூரியில் சட்ட மேற்படிப்பில் (எம் எல்) சொத்துரிமைச் சட்டம் என்னும் பிரிவு ஆரம்பிக்க திட்டம் உள்ளது.

(ஆ) மேற்கூறிய சட்ட மேற்படிப்பு (எம்.எல்.) 1980-81 ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்படும்.